

# திராவிட மாடல் அரசு

75

'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....



# 'பட்டா மாற்றம்' -நில உரிமையை நிலைநாட்டும் அரசு!

தமிழ்நாட்டில் ஒருவரின் நில உரிமையை சட்டரீதியாக உறுதி செய்யும் ஆவணம் 'பட்டா'. ஒரு நிலத்துக்காக வருவாய்த் துறை வழங்கும் பதிவு ஆவணம் இது.

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை புறநகர்ப் பகுதிகளில், தமிழ்நாடு நகர்ப்புர மேம்பாட்டு வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்ட திட்டங்களுக்கு நீண்ட காலமாகவே பட்டா வழங்குவதில் நடைமுறைச் சிக்கல்கள் நீடித்தன. மேலும் சில இடங்களில் அரசு ஒதுக்கிய மனைப் பிரிவுகளில் பட்டா பெறுவதில், நீடித்து வரும் சிக்கல்களால், அங்கு குடியிருப்பவர்களும் 'நில உரிமை' தவிப்பில் இருப்பர்.

## அரசுத் திட்ட மனைகள்

தமிழ்நாடு நகர்ப்புர மேம்பாட்டு வாரியம் மூலம் 1979-80 ஆண்டுகளில் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் மற்றும் 1989-90 ஆண்டுகளில் தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் கீழ் சென்னை, திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் 351 குடியிருப்பு மனைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

அந்தத் திட்டங்களில், மனை வாங்கிய மக்களுக்கு நிலஉரிமை வழங்கப்படாமல் சிக்கல் நீடித்து வந்தது. மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒதுக்கீடு ஆணைகள் மற்றும் கிரையப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறு கிரையப் பத்திரம் மற்றும் ஒதுக்கீடு ஆணைகள் வழங்கப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட வேண்டும். மக்கள் பட்டா கோரி வந்த நிலையில், தற்போது, திராவிட மாடல் அரசின் சிறப்புத் திட்டம் மூலம் விரைவில் பட்டாக்கள் வழங்கப்படவுள்ளன.

## சிறப்புத் திட்டம் செயலாக்கம்

இந்தச் சிக்கல்களை ஆராயவும், தீர்வு காணவும், இந்த ஆண்டு, ஜனவரி மாதம், 12-ஆம் தேதி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் உயர் நிலை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில், நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத் திட்டங்கள் நடைபெறும் இடங்களில், நில உரிமை மாற்றம் செய்வது குறித்தும், பயனாளிகளுக்கு விற்பனைப் பத்திரம் வழங்குவது, தனிநபர் பட்டாக்கள் வழங்குவது மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை புறநகர்ப் பகுதிகளில் பட்டா வழங்குவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை புறநகர்ப் பகுதிகளில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவது, வருவாய்த் துறையோடு மட்டும் சம்பந்தப்பட்டதாக இல்லை. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வீட்டு வசதித் துறை, நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், மாநகராட்சி, மற்றும் கால்நடைத் துறை எனப் பல துறைகள் தொடர்பு கொண்டிருக்கின்றன. அதனால், சிறப்புத் திட்டமாக செயல்படுத்தினால் மட்டுமே, சாத்தியமாகும்.

இதையடுத்து, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சர், சிறு குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை அமைச்சர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் ஆகியோர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், ஆட்சிப்பணி அதிகாரிகளைக் கொண்ட மாநில அளவிலான உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

**உயர்நிலைக் குழு எடுக்கும் நடவடிக்கைகள்!**

நகர்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மனையிடங்கள்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்.

நகர நில அளவைத் திட்டம் - சென்னை மற்றும் புறநகர் மாவட்டங்கள்.

ஒருமுறை வரன்முறை செய்யும் திட்டம்.

சென்னை கிராம நத்தம்.

நத்தம் நில ஆவணங்களில் ரயத்துவாரி மனை என மாற்றம்.

பெருநகர சென்னை வளர்ச்சிக் குழுமம்.

அரசுப் புறம்போக்கு நில ஆக்கிரமிப்பு வரன்முறை செய்தல் - சென்னை மற்றும் புறநகர் மாவட்டங்கள்.

கோரிக்கைகள் மீது நடவடிக்கைகள்.

இந்த உயர்நிலைக் குழு ஒருங்கிணைப்பாளராக, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் ஆட்சிப் பணி அதிகாரி தலைமையில், வருவாய்த் துறை அலுவலர்களைக் கொண்டு 'சிறப்புப் பிரிவு' ஒன்று அமைக்கப்பட்டது. இந்த சிறப்புப் பிரிவினர் அனைத்துத் துறைகளுடன் ஒருங்கிணைந்து, இந்தத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த பணியாற்றி வருகின்றனர்.

## பெயர் மாற்றப் பணிகள்

திட்டப்பகுதிகள் அமைந்துள்ள அரசு நிலங்கள், தமிழ்நாடு நகர்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் பெயரில் இதுநாள் வரை மாற்றம் செய்யப்படாமலே இருந்தன. அது தொடர்பான நிலங்களை அளவீடு செய்து, அந்த ஆவணங்கள் நில நிர்வாக ஆணையர் வழியாக சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பி வைக்க வேண்டும்.

நில எடுப்புப் பணிகள் முடிவடைந்து, நீதிமன்ற வழக்குகள் ஏதும் இல்லாத இடங்கள் மற்றும் நில உரிமை மாற்றம் செய்ய அரசாணை பிறப்பிக்கப்பட்ட இடங்களும் வாரியத்தின் பெயரில் கொண்டு வரப்படும். இந்த வகையில், வாரியத்தின் பெயரில் மாற்றம் செய்யப்பட்ட பின்னர், அந்தத் திட்டப் பகுதிகளில் குடியிருப்பவர்களின் கிரையப் பத்திரம் அடிப்படையில், அவர்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்கப்படும்.

விற்பனைப் பத்திரங்கள் உள்ளவர்களுக்கு இணைய வழியில் பட்டா மாறுதல் செய்யப் படும். அதன்பின்னர் அங்கு வசிப்பவர்கள் அந்த நிலங்களின் பூர்வ உரிமை கொண்டவர்களாக மாற்றப்படுவர். இந்தப் பணிகள் மூலம் சென்னை, செங்கல்பட்டுப் பகுதிகளில் அரசின் திட்டப்பகுதிகளில் இடம் வாங்கியவர்கள் கணக்கெடுக்கப்பட்டு விரைவில் பட்டா பெறவுள்ளனர்.

## நகர நிலவரித் திட்டம்

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் தமிழ்நாடு நகர்புற மேம்பாட்டு வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்ட திட்டங்களை போல, மாநிலத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகளில் வருவாய்ப் பதிவேடுகளில் உள்ள பதிவுகளை மேம்படுத்துதல், நில உரிமையாளர்களுக்குப் பட்டா வழங்குதல் ஆகியவை மேற்கொள்ளப்பட உள்ளன.

இது தவிர, அரசு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வருபவர்களுக்கு, தகுதியின் அடிப்படையில் வரன்முறை செய்து வீட்டுமனைப் பட்டா வழங்குவதில், உள்ள சிக்கல்களைக் களைவது. சென்னை மாவட்டத்தில் உள்ள கிராம நத்தம் இடங்களுக்கு கணினி பட்டா வழங்குவது, இவைத் தவிர, சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் அரசுப் புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி, ஆக்கிரமித்துள்ளவர்களைக் கணக்கெடுப்பு செய்தல் ஆகிய பணிகளையும் சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை மேற்கொள்ளவுள்ளது.

**5 ஆயிரம் குடும்பங்களுக்கு பட்டா கிடைக்க உள்ளது. அந்த மக்களின் அல்லல்களைத் தீர்த்து, விடியலைத் தரவுள்ளது விடியல் அரசு.**

நில உரிமை தொடர்பான சிக்கல்களுக்கு, ஒரே நாளில் தீர்வு காண முடியாது. அதை உணர்ந்த நம் அரசு அனைத்துத் துறைகளையும் இணைத்து தீர்வு காண திட்டமிட்டதுதான், வேதனைகளுக்கு விடிவைக் கொண்டுவர உள்ளது. இந்தப் பணிகள் மூலம் முதற்கட்டமாக 5 ஆயிரம் குடும்பங்களுக்கு பட்டா கிடைக்க உள்ளது. அந்த மக்களின் அல்லல்களைத் தீர்த்து, விடியலைத் தரவுள்ளது விடியல் அரசு.

...சாதனை தொடரும்

## பட்டும் திருந்தாத பா.ஜ.க.!

ஒரு மக்கள்நல அரசு என்பது, மக்கள்நலனையே சிந்திக்க வேண்டும். ஆனால், பாரதிய ஜனதா கட்சியோ எப்போதுமே மதவாதத்தை முன்னிறுத்தி, மக்களைப் பிளவுபடுத்தி அரசியல் ஆதாயம் பெறுவதிலேயே கவனம் செலுத்துகிறது. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் மதவாதத்தையே கையிலெடுத்தார் மோடி. குறிப்பாக, அயோத்தி ராமர் கோவில்.

உச்சநீதிமன்ற உத்தரவின்படி, ஒரு தனியார் அறக்கட்டளையால் கட்டடப்பட்ட ராமர் கோவிலை பா.ஜ.க.வின் சாதனையாக முன்னிறுத்திய மோடி, ராமர் கோவில் குடமுழுக்கில் கலந்துகொள்ளாததற்கு எதிர்க்கட்சிகளைக் குற்றம்சாட்டினார். 'இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால், ராமர் கோவிலை புல்டோசர் வைத்து இடிப்பார்கள்' என்று வெறுப்புப் பிரச்சாரத்தின் உச்சத்துக்கே சென்றார். உத்தரப்பிரதேச மக்களோ இந்தப் பிளவுவாத வெறுப்புப் பேச்சுகளை நிராகரித்து, பா.ஜ.க.வுக்குத் தோல்வியைப் பரிசாகத் தந்தனர். குறிப்பாக, ராமர் கோவில் அமைந்த பைசாபாத் தொகுதியிலேயே தோல்வி கண்டது, பா.ஜ.க. இவ்வளவு பட்டும் திருந்தவில்லை பா.ஜ.க.

அயோத்தியில் கடந்த சில நாட்களுக்குமுன், கனமழை பெய்தது. அப்போது, ராமர் கோவிலுக்குச் செல்லும் வழியில் மழைநீர் தேங்கியுள்ளது. மேலும் கோவில் செல்லும் பாதையில் உள்ள சாலைகளின் வளைவுகளிலும் மழைநீர் தேங்கியது. ராமர் கோவில் செல்லும் வழி, சாலையில் மழைநீர் தேங்கிய சம்பவம் தொடர்பாக 6 அதிகாரிகளை உத்தரப்பிரதேச அரசு சஸ்பெண்ட் செய்துள்ளது.

மக்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள பிரச்னைகளைப் புறக்கணித்து கோவிலுக்கே முக்கியத்துவம் கொடுக்கும் பா.ஜ.க.வுக்கு பக்தியும்கூட முக்கியமில்லை; அரசியல் ஆதாயமே குறி. தேர்தலுக்காக ராமர் கோவில் கட்டுமானம் முடியாமலே அவசரமாக மோடி குடமுழுக்கு நடத்தினார். அதனால் கனமழை காரணமாக ராமர் கோவிலின் மேற்கூரையில் நீர் கசிவு ஏற்பட்டுள்ளது.

கோயிலுக்குச் செல்லும் வழியில் மழைநீர் தேங்கியதற்கு அதிகாரிகளுக்குத் தண்டனை என்றால் மேற்கூரை ஒழுகுவதற்குக் காரணமான பா.ஜ.க தலைவர்களுக்கு என்ன தண்டனை?

## :.ப்ளாஷ்பேக்



சாதிக் பாட்சா



**'சாதிக் பாட்சா'வுக்கு உடனே அனுமதி!**

2014-ஆம் ஆண்டு கோவையிலிருந்து தலைவர் கலைஞரைக் காண சென்னை சென்றோம். நாங்கள் கோபாலபுரம் சென்றபோது, மாலை 6 மணியாகிவிட்டது. தலைவர் சிறிது உடல் நலம் சரியில்லாமல் ஓய்வில் இருப்பதாகச் சொன்னார்கள். தலைவரைப் பார்க்க வேண்டும் என கேட்ட நேரத்தில் சண்முகநாதன் அவர்கள், துண்டுச் சீட்டில் எனது பெயர், பொறுப்பு (J.சாதிக் பாட்சா, கோவை, பகுதிக் கழகப் பிரதிநிதி) என்று எழுதி வாங்கிச் சென்றார். தலைவர் உடனே அனுமதி அளித்தார். 'சாதிக் பாட்சா' என்ற பெயரைப் படித்து, என்னைப் பார்த்து அவருக்கே உரிய புன்னகை செய்தார்.

**– கரும்புக்கடை J.சாதிக் பாட்சா,
கரும்புக்கடை தி.மு.க, கோவை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### ஒரே இனத்தில் கிளைத்தவர்கள்!

1958-ஆம் ஆண்டில் கர்நாடக மாநில தி.மு.கவின் இரண்டாவது மாநில மாநாடு நடைபெற்றது. அப்போது அண்ணா, 'திராவிட நாடு கோரிக்கை' எவ்வளவு பலமானது, நியாயமானது, தேவையானது, நிராகரிக்கப்பட முடியாதது என்பது குறித்து நீண்ட உரையாற்றினார். மொழியால் வெவ்வேறு தேசிய இனங்கள் ஆகிவிட்ட நிலை வளர்ந்து விட்டது. ஆனால், எதிர்காலத்தில் நாம் ஒரே இனத்திலிருந்து கிளைத்தவர்கள் என்கிற அடிப்படையில், அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கு எண்ண எழுச்சியை உருவாக்கிக் கொள்ள வேண்டும்" என ஆழமான வேர்களைக் கொண்ட வரலாற்று உரையாற்றினார் அண்ணா.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

525

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.